

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2024) முகாம் அலுவலகத்தில், நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹுசைன் சாஹிப் மற்றும் நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ் குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி, மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஜெயராமகிருஷ்ணன் மகள் மருத்துவர் ஐஸ்வர்யா – மருத்துவர் சூர்யா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருச்சி மாவட்டத்தில்

# 9 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றிக்குப் பாடுபட வேண்டும்!

## அமைச்சர் கே. என். நேரு பேச்சு!



திருச்சி, நவ. 21 -

திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு முன்னிலை வகித்து பேசியதாவது:

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது சட்டமன்றத் தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றால்தான் மீண்டும் தளபதி ஸ்டாலின் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்பார்.

எனவே அதற்கு நீங்கள் உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். அதேபோல் தொகுதிவாரியாக நம்முடைய தலைவர் கலைஞரின் திருஉருவச் சிலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அனைத்து தொகுதிகளிலும் தலைவரின் திருவுருவ சிலைகள் விரைவில் அமைக்கப்படும். கலைஞர் தான் நம் அனைவரையும் உருவாக்கியவர் கலைஞர் தான் நம்மை ஆளாக்கியவர் கலைஞர் தான் நம்மை வளர்த்து எடுத்தவர்.

இன்றைய நிலையில் தளபதியின் மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து குறைகளை சொல்லி அடுத்து நாங்கள் தான் என்று பலர் பேசி வரும் நிலை ஏற்பட்டுள்ளது இந்த அறிவாலயத்தில் இருந்து நாங்கள் சொல்லுகிறோம் மீண்டும் தலைவர் தளபதி தான் முதல்வராக ஆட்சி பொறுப்பில் ஏறுவார். இன்று எதிர்க்கட்சி தலைவர்கள் கூட சிலர் அடுத்த முதல்வர் தளபதி தான் என்று கூறுகிறார்கள்.

2026 ஆம் சட்டமன்றத் தேர்தலில் முன்னோட்டமாக நம்முடைய துணை முதலமைச்சர் திருச்சிக்கு வருகை தந்து இளைஞர் அணி கூட்டத்தில் பங்கேற்று, புதிய நூலகத்தை திறந்து வைத்து, கலைஞரின் திரு உருவ சிலையை திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார். எனவே தளபதியின் வெற்றி என்பது இந்த திருச்சியில் இருந்துதான் ஆரம்பிக்கிறது. நிச்சயம் நம்முடைய தளபதி மீண்டும் முதல்வர் ஆவார் என்று கூறினார். இக்கூட்டத்தில் தீர்மானம்:

23.11.2024 சனிக்கிழமை அன்று திருச்சிக்கு வருகை தரும் துணை முதலமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழக முதன் மைச் செயலாளர் கே.என் நேரு தலைமையில் திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழகத்தினர் அனைவரும் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளிப்பது.

துறையூரில் நடைபெறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை திறப்பு விழா நிகழ்ச்சியிலும், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேருவின் புதிய அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியிலும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள், செயல்வீரர்கள் பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பிப்பது. வருகின்ற நவம்பர் 27ம்தேதி அன்று பிறந்த நாள் காணும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்றைய தினம் மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானி க்கப்படுகிறது.

தி.மு.க. கழகத்தலைவரும், தமிழக முதல்வருமான தளபதி அவர்களின் அறிவிற்பிற்கிணங்க வரும் சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெறும் வகையில் திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்டங்களில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி மற்றும் தேர்தல் பணிகளில் கழகத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து வெற்றிக்கு அயராது பாடுபடுவது என உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் அவைத்தலைவர்கள் எஸ்.ஏ. அம்பிகாபதி, பேரூர் தர்மலிங்கம் ஆகியோர் தலைமை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் வைரமணி, காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ. மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், எம்.எல்.ஏக்கள் பழனியாண்டி, சவுந்தரபாண்டியன், கதிரவன், ஸ்டாலின் குமார், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன், சேர்மன் துரைராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் முத்துச் செல்வம், விஜயா ஜெயராஜ், அல்லூர் கருணாநிதி, செயற்குழு உறுப்பினர் கிரப்பட்டி செல்வம், காஜாமலை விஜய், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாநில மாணவரணி துணைச் செயலாளர் ஆனந்த், கருணை ராஜா செவந்தி லிங்கம், மாநகர துணைச் செயலாளர்கள் கவுன்சிலர் கலைச் செல்வி, மாவட்ட மகளிர் அமைப்பாளர் கவிதா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ஜெயராமகிருஷ்ணன் மகள் மருத்துவர் ஜெ.ஐஸ்வர்யா – மருத்துவர் சி.சூர்யா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இணையரை வாழ்த்தினார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி.கே.எஸ்.மஸ்தான், திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.


